[2002 மார்ச் 13

திறக்கப்படாமல் இருக்கிறது. அதைச் சார்ந்த பூவிருந்தவல்லி பகுதியில் உள்ள Maternity மருத்துவமனையில் ஒரு ஆபரேசன் தியேட்டரும் ஆவடி பகுதியில் நகராட்சி மருத்துவமனையில் ஒரு ஆபரேசன் தியேட்டரும் இயங்காமல் உள்ளன. இப்படி மூன்று ஆபரேசன் தியேட்டர்களும் இயங்காமல் இருக்கின்றன. நம்முடைய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சண்முகம், தனிக் கேள்வியாகப் போடுங்கள்.

வினா எண் 15, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***512—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங்குளம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங் குளம் ஆதிதிராவிடர் காலனி என்பது பெருங்கண்ணங்குளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். பெருங்கண்ணங்குளம் குடியிருப்பிற்கு நாங்குநேரி, திசையன்விளை மற்றும் 342 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே அங்குள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றி குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002 மார்ச் 13]

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, பெருங்கண்ணங் குளம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், தாங்களும் அனுமதி அளித்துள்ளீர்கள். அதற்கு ஏற்கெனவே 15 தினங்களுக்கு முன்னால் நாங்கள் அடிக்கல் நாட்டிவிட்டோம். அந்த ஊர் மட்டுமல்ல, அதே பஞ்சாயத்தைச் சார்ந்த, பொண்ணாத்தி, புத்துக்குறிச்சி, குட்டம் பஞ்சாயத்தைச் சார்ந்த ஜார்ஜ் நகர், மைக்கேல் நகர், அண்ணா நகர், உவரி காலனி, ரம்மதபுரம், நம்பிக்குறிச்சி, தெற்குகள்ளிக்குளம், கூடங்குளம், செட்டிகுளம், விசுவநாதபுரம், நரிப்பாறை, மகாராஜபுரம், கைலாசபுரம், ஆ. திருமலாபுரம், ஓட்டக்காரன் குடியிருப்பு, சின்னம்மாள்புரம் ஆகிய....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்பாவு, கஸ்தூரிரெங்கபுரத்தோடு நில்லுங்கள். தொகுதி முழுவதும் கேட்டுக்கொண்டு போனீர்கள் என்றால் அமைச்சர் எப்படிப் பதில் சொல்லமுடியும்?

திரு. மு. அப்பாவு: கிராமங்களில் இந்த ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அனுமதி வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கடந்த ஆட்சியில் பெறப்பட்ட தாமிரபரணி-பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இந்த ஆண்டு Tender கோரப்பட்டுள்ளது. அதுவும் வருகிற 2003 மார்ச் மாதம் தாமிரபரணியிலிருந்து பணகுடி, வள்ளியூர், ஏர்வாடி, களக்காடு, திருக்குறுங்குடி ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறீர்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் அறிவித்த தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 342 வழியோர கிராமங்களுக்குக் குடிநீர் தருவதாக உறுதி அளித்தீர்கள். ஆனால், அதிலே 103 கிராமங்களுக்கு மட்டுமே தற்போது இணைப்பு வழங்குவதாகச் சொல்கிறார்கள். மற்ற கிராமங்களுக்கு இணைப்பு வழங்குவதற்கு ஏற்கெனவே ஒப்பந்தம் பெற்றுள்ள L & T நிறுவனத்தினர் மறுத்து வருகின்றனர். அதற்கு நிதி ஏராளமாக இருக்கிறது. தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 43 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கி நிதியும் இருக்கிறது. ஆகவே, நீங்கள் அறிவித்த 342 கிராமங்களுக்கும், 1996-க்குப் பிறகு கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு இணைப்புக்

[2002 மார்ச் 13

முற்பகல் 10-30

கொடுக்க மறுத்து வருகிறார்கள். ஆகவே, அந்த தாமிரபரணி, நாங்குநேரி, திசையன்விளை சிறப்புக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாத, புதியதாக 1996-க்குப் பிறகு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விரைவாக இணைப்பு வழங்குவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

16—

தெரு விளக்கு வசதி

***769—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்குத் தெரு விளக்கு வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், பொறுப்பு மேட்டுப்பட்டி பஞ்சாயத்து, தாழையூத்துப்பட்டிக்குத் தெரு விளக்கு அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கிராமம் சிறிய கிராமமாக இருக்கிறது. மேலும் அந்தக் கிராமத்தில் ஏற்கெனவே மூன்று தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டுமென்றால் ஊராட்சி மன்றத் தலைவருடைய தீர்மானத்தின் அடிப்படையில் அந்தக் கிராமத்தினுடைய ஊராட்சி நிதியைப் பயன்படுத்தி அவர்களே அமைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.